**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**
**DEPOSITION OF WITNESS**
**SC.No.24/2024 – PW-9**

| | |
|---|---|
| Name | திரு.சிம்பு (எ) சிலம்பரசன் |
| Husband/Father Name | பெருமாள் |
| Village /Area | கரியாக்குடல் |
| Taluk | நெமிலி |
| Occupation | தூய்மை பணியாளர் |
| Age | 37 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 16.07.2025.

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். என்னுடைய மாமா சம்பத்து என்பவர் எனக்கு தொலைபேசி மூலம் தனசேகர் என்பவரையும் கிருஷ்ணன் மற்றும் தேன்மொழி என்பவரையும் எதிரிகள் மணி, ஆனந்த், அருண் ஆகியோர்கள் கத்தியால் குத்தியதாகவும் புன்னை மருத்துவமனைக்கு வந்துள்ளதாகவுமம் தகவல் தெரிவித்தார்கள். நான் புன்னை மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன் அங்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் அங்கு முடியாது என மேல் சிகிச்சைக்காக சென்னை அனுப்பிவைத்தனர். அங்கு தனசேகர் என்பவரை ஸ்டான்லி மருத்துமனையில் பரிசோதித்த மருத்துவர்கள் அவர் இறந்து விட்டதாக தகவல் தெரிவித்ததாகவும் கிருஷ்ணன், தேன்மொழி என்பவர்கள் இராஜீவ் காந்தி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்கள். எதிரிகளை அடையாளம் காட்ட வேண்டி காவல் துறையினர் மூன்றாம் மாதம் 2016 அன்று என்னையும் என்னுடன் பூபாலன் என்பவரையும் எதிரிகளை தேடி அழைத்த சென்ற

போது திருவள்ளூர் அருகே மணி என்பவரின் சகோதரர் மாரி என்பவரின் வீட்டில் காவல் துறையினர் விசாரணை செய்தார்கள். அப்போது மாரி என்பவரின் மகன் புருசோத்தமன் என்பவர் எதிரிகள் அங்கு தங்கியிருந்தாகவும் தற்போது இல்லை என்றும் வாக்குமூலம் கொடுத்தார் அதனை போலீசார் பதிவு செய்தார்கள். அதில் சாட்சியாக நானும் பூபாலன் என்பவரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான் அது அதசா.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது குறித்து போலீசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை.**

**ஒம்./-திருமதி. கே.எஸ்.ஜெயமங்களம்,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**அரக்கோணம்.**